# இலங்கை அரசாட்சி 'கெசெற்' பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,831 — 1931 ம் ௵ மாசி௴ 20 ந் திகதி வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பிறவுன்லோ—ஹுகொம்பெ தெருவில் 3 ம் கட்டையில் கல்லு எடுக்கிற இடம் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 8,986. குறிச்சி—மஸ்கெலியா, அம்பகமுவ கோறளை, உடபுலத்கம, கண்டி டிஸ்திறிக்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | கியன்சாஎஸ்ரேற் .. | தேயிலைதோட்டம் .. | கியான்சா ரீ கொம்பனி ஒவ் சிலோன் லிமிற்றற், ஏஜென்ற்ஸ்; மேசஸ் லுவிஸ்பிறவுன் அண்டு கொம்பனி | 0 2 11·1 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஐப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ௵ மார்ச் மாசம் 27 ந் தேதியிலன்று பிற்பகல் 2 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்படுத்தத் தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளின்து தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1931 ம் ௵ மாசி௴ 14 ௳.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாத்துறைப் பிரிவைச்சேர்ந்த கந்தபடபத்துவிலிருக்கும் தெயியந்தறையில் பகிரங்க கிணறொன்று கட்டுதல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

83 ம் இல. கடைசிக் கிராமப்படத்துக்கு நாலாவது. குறிச்சி— பண்டிதபோறுவ.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 2எச் | கொங்ககாகேன .. | பாழ்நிலம் .. | (1) கஹுக்கலை கோயில் வாசியாகிய பியரத்தன தெருங்நான்சே, (2) பண்டிதபோறுவ வாசியாகிய டபிள்யு. கே. ஏ. தொன் தியோனிஸ், (3) பண்டிதபோறுவ வாசியாகிய டபிள்யு. டீ. தொன் லூவிஸ், (4) பண்டிதபோறுவ வாசியாகிய உவை. எம். புஞ்சி. பண்டா செனெவிரத்தின, (5) பரப்பமுல்லை வாசியாகிய டீ. எஸ். வணிகநாயகயாப்பா, (6) பள்ளெவெலை வாசியாகிய டீ. சீ. இராஜபக்ச | 0 0 2·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ௵ பங்குனி மாசம் 17 ந் தேதியிலன்று காலமே 11 மணிக்கு அக்மனை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1931 ம் ௵ மாசிமீ 12 ந் உ.

எச். ஜே. எல். விக்லேயர்,
உப அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மாத்துறைப் பிரிவைச்சேர்ந்த வெலிகாம் கோறளையிலுள்ள பெட்டபிற்றியாவிலிருக்கும மாறம்பே சுயபாஷைக் கலவன் பாடசாலையை விசாலித்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

537 ம் இல. கடைசிக் கிராமப்படத்துக்கு மூன்றாவது. குறிச்சி—பெட்டபிற்றியா.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 71ஈ | கெரவலியக்கொட | 10 வயசுள்ள 22 தென்னை மரங்களுள்ள தோட்டம | மாறம்பேவாசியாகிய டீ. டீ. ஏ. ஜயசிங்கசிறிவர்த்தன | 1 | 0 | 5·5 |
| 73டீ1 | அல்லியத்த .. | நெல்வயல் .. | (1) பெட்டபிற்றியாவிலிருக்கும் டீ. கிமாரு சிறிவர்த்தன, (2) பெட்டபிற்றியாவிலிருக்கும் டீ. கிளாற சிறிவர்த்தன, (3) பெட்டபிற்றியாவிலிருக்கும் டீ. கொர்நேலியா, (4) பெட்டபிற்றியாவிலிருக்கும் எச். எல். எதோரிஸ் தியஸ், (5) பெட்டபிற்றியாவிலிருக்கும் டீ. எச். டி. எஸ். சமரவீரஎற்றி (6) பெட்டபிற்றியாவிலிருக்கும் சீ. தியஸ் லொகு றணமுன, (7) பெட்டபிற்றியாவிலிருக்கும் டபிள்யு. ஆர். ஜேன் | 0 | 0 | 4·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ௵ பங்குனி மாசம் 20 ந் தேதியிலன்று காலமே 11 மணிக்கு அக்குறுசை வாடிவீட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துக்களின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1931 ம் ௵ மாசிமீ 12 ந் உ.

எச். ஜே. எல். விக்லேயர்,
உப அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கெடேபொல பள்ளிக்கூடம் கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 52. குறிச்சி—தும்பற.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 14B | பனுகலேவத்த அல்லது இஸ்தோறுவத்த | தோட்டம் .. | கிரியெல்ல விஹார பராபரிப்புக்காறர் .. | 0 | 0 | 4·3 |
| 56D | பனுகலேகேன .. | சேனை முதலியன .. | ஷை .. | 0 | 2 | 19·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பறறிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ௵ பங்குனி மாசம் 19 ந் தேதியிலன்று பிற்பகல் இரண்டு மணிக்கு தும்பறையில் றற்றமகத்மாவின் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1931 ம் ௵ மாசிமீ 12 ந் உ.

ஸீ. எச். கொலின்ஸ்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் யூனியன் பிளேசில் 11 ம் நெம்பர் டேசனுக்கு பக்கச்சுவர் கட்டுதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 20,160. குறிச்சி—கொம்பனித்தெரு.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | வில்லாட் சேவிஸ் டேசன் (யூனியன் பிளேஸ் இறைவரி இலக்கம் 90 | சுவர் கட்டிடத்தின் பகுதியும் தூண் அடியும் | காந்தவெளிச்ச கொம்பனி.. | 0 0 0·08 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ௵ பங்குனி மாசம் 30 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொளும்புக் கச்சேரி,
1931 ம் ௵ மாசிமீ 17 ௳.

எச். பி. கொவ்மன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கொகுவலச் சந்தி முடக்கு திருத்துவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 20,163. குறிச்சி—கனுபோவில கிழக்கு.

| துண்டு. | காணியினது பெயர் | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | தெல்கசாவத்தை இறைவரி இலக்கம் 395 ன் பகுதி | வெறுங்காணி .. | என். டி. ஈ. ஜயவர்த்தன .. | 0 0 2·61 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ௵ பங்குனி மாசம் 31 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1931 ம் ௵ மாசிமீ 17 ௳.

ஈ. டபிள்யு. கன்னங்கர,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வண்ணார் பிடவை கழுவும் தொட்டி கட்டுவதற்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை அஃதாவது :—

பிரதமபடத்து இலக்கம் 4,064. குறிச்சி—இரத்தினபுரி நகரசங்க எல்லைக்குள்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | பிடகந்தேதெனிய அல்லது கல்கடுவ எஸ்ரேற் | ஒரு றபர் கண்டு .. | சப்பரகம் ரீ. வும் றபர் கொம்பனி லிமிட்டட் வும் ஜீ. எம். பண்டார | 0 0 1·8 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 0 2·5 |
| 3 | ஷை .. | 7 றபர் கன்று .. | ஷை .. .. | 0 0 5·4 |
| 4 | பிடகன்தேதெனிய .. | தெனிய .. | ஜீ. எம். பண்டார .. .. | 0 0 3 |
| 5 | றடாகேகேன .. | சேனை .. | நீக்குலஸ் பீரிஸ் .. .. | 0 2 20·2 |
| | பிரதமபடத்து இல. 347, 2 ம் துண்டு. குறிச்சி—வெறலுப்ப. | | | |
| 92B | கல்கட்டுவ எஸ்ரேற் .. | றபர் வும் ரீ .. | சப்பரகம் ரீ வும் றபர் கொம்பனி லிமிட்டட் | 0 2 20·5 |
| 92C | ஷை .. | ரீ .. | ஷை .. .. | 0 1 15·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1931 ம் ௵ பங்குனி மாசம் 26 ந் தேதியிலன்று பிற்பகல் இரண்டரை மணிக்கு இரத்தினபுரி கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1931 ம் ௵ மாசிமீ 17 ௳.

சீ. எச். கொலின்ஸ்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசண்டு.

## அரசாட்சியாரால் விற்கப்பட்ட காணிகள் சொந்தக்காரரினாற் கைவிடப்பட்டிருக்குமிடத்து அவைகளை அரசாட்சியார் மறுபடி எடுத்துக்கொள்ளவிருப்பதைப்பற்றிய அறிவித்தல்.

இத்துடனிணைத்திருக்கும் டாப்பில் காட்டப்படுகின்றனவும் சப்பிரகாம மாகாணத்தில் இரத்தினபுரி டிஸ்திறிக்கில் கடவத்த கோறளையில் உடுவகம்பத்துவில் போல்தும்ப என்னுங் கிராமத்திலுள்ளனவும் அரசாட்சியாரால் விற்கப்பட்டவைகளுமானவும் 369 ஏக்கர் விஸ்தாரமுள்ளவைகளுமான துண்டுக்காணிகள். சென்ற எட்டு வருஷங்களுக்கு மேற்பட்ச் சொந்தக்காரரினால் கைவிடப்பட்டிருப்பதாக எனக்குத் தோற்றுகிறபடியாலும் கவனமாகவும், நியாயமாகவும், விசாரணைசெய்தும் அச்சொந்தக்காரர் அல்லது அவர்கள் வழியாக நியாயமுறையாக உரித்துப்பேசுபவர்கள் யார் என்று அறிந்துகொள்ளக் கூடாதிருப்பதினாலும், சப்பிரகாம மாகாணத்து அரசாட்சி ஏசண்டர் சார்ள்ஸ் கென்றி கொலின்ஸ் ஆகிய நான் 1932 ம் ஆண்டு பங்குனி மாசம் 1 ந் தேதியிலன்று அல்லது அத்தேதிக்கு முன் அக்காணிக்கு உரிமை ஸ்தாபிக்கக்கூடிய எவராலேனும் அவருக்காகவேனும் அக்காணிக்கு உரித்துப்பேசப்படாவிட்டால் 1887 ம் ஆண்டின் 4 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினால் எனக்குக் கொடுக்கப்பட்ட தத்துவத்தின் பேரினாலும் அதியுத்தம தேசாதிபதியின் அனுமதியுடனும் மேற்படி கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் பிரகாரம் அக்காணி அரசாட்சியாரால் திரும்பச் சுதந்தரமாக்கிக்கொள்ளப்படுமென்று இதனால் வெளியரங்கப்படுத்துகிறேனென்பதை இக்காரியத்திற் சம்பந்தமுள்ள சகலரும் அறிந்துகொள்வீர்களாக.

இரத்தினபுரிக் கச்சேரி,
1930 ம் ஆண்டு மார்கழிமீ 10 ம் திகதி.

சீ. எச். கொலின்ஸ்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசண்டர்.

### குறிக்கப்பட்ட டாப்பு.

**94,139 ம், 94,140 ம் உரிமைப்படங்களில் விபரிக்கப்பட்ட ஐயன் தோட்டம்.**

எல்லைகளாவன—வடக்கு : முடிக்குரிய நிலம் வலவ ஆற்றுக்காகச் சேமித்த நிலம் ;
கிழக்கு : முடிக்குரிய நிலமும் 300,814 ம் உ. ப. ல் விபரித்திருக்குங் காணியும் ;
தெற்கு : போல்தும்ப ஓயவும், 72,422 ம் உ. ப. ல் விபரித்திருக்குங் காணியும் ;
மேற்கு : 72,422 ம் உரிமைப்படத்தில் விபரித்திருக்குங் காணியும் முடிக்குரிய காணியும் வலவ ஆற்றுக்குச் சேமித்திருக்குங்காணியும்.

அரசாட்சியாரால் பின் சொல்லப்படும் திகதியில் கப்ரின் பிறுன்சிஸ் பெயிலிக்கு விற்கப்பட்டது.

| பி. படம். | துண்டுக் காணி. | விசாலம். ஏ. றூ. ப. | உரிமைப் படம். | விற்பனவுத் திகதி. |
|---|---|---|---|---|
| 2,179 | .. 7,703 | .. 227 0 0 | .. 94,139 | .. 5–12–1873 |
| 2,179 | .. 7,705 | .. 142 0 0 | .. 94,140 | .. 5–12–1873 |

## கேள்விப்பத்திரங்களைப்பற்றிய அறிவித்தல்.

நிலாவெளி உப்புக் குதத்திலிருந்து மட்டக்களப்பு உப்புக் குதத்திற்கு 25,000 அந்தர் சொரியல் உப்பு 1931 ம் ஆண்டு வைகாசி மாதம் 1 ந் திகதிக்கும் ஆடி மாசம் 31 ந் திகதிக்குமிடையில் அதாவது 8,000 அந்தர் வைகாசி மாசம் 31 ந் திகதிக்கு முன்னும் 8,000 அந்தர் ஆனி மாசம் 30 ந் திகதிக்குமுன்னும் மீத 9,000 அந்தர் ஆடி மாசம் 31 ந் திகதிக்கு முன்னுமாய்க் கொண்டு பாவதற்குக் கேள்விக்கடுதாசிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. நிலாவெளியிலிருந்து ஒரு அந்தர் நிறுத்து அடுக்குச் செலவு சேர்த்து எள்ளவீத கூலிக்கு ஏற்றக்கூடுமென்று கேள்விக்கடதாசியில் காட்டப்படவேண்டும்.

3. கேள்விக்கடுதாசியின் உறை இடப்பக்கமூலையில் உப்பு ஏற்றக் கேள்விக் கடுதாசியென்று எழுதப்படல்வேண்டும். கேள்விக்கடுதாசிகள் கிழக்கு மாகாண அரசாட்சி ஏசன்று அவர்களின் மட்டக்களப்பு கந்தோரில் 1931 ம் ஆண்டு பங்குனி மாசம் 13 ந் திகதி வெள்ளிக்கிழமை மத்தியானத்துக்குப் பிந்தாமல் சேர்க்கப்படல் வேண்டும்.

4. கேள்விக்கடுதாசிகள் போமில எழுதப்படல்வேண்டும். அப்போம் மட்டக்களப்புக் கச்சேரியில் கேட்டுப்பெற்றுக்கொள்ளலாம். குறிக்கப்பட்ட போமில் எழுதப்படாத கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

5. கேள்விப்போம் பெறுவதற்கு ரூபாய் 50 எந்தக் கச்சேரியிலாவது கட்டிப்பற்றுத்துண்டு காண்பிக்கவேண்டும். கிழக்கு மாகாண ஏசன்றரால் அல்லது சரியான தத்துவம் ஏற்றவரின் பதில் ஆளால் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென்று எழுத்தில் அறிவித்தல் பெற்ற ஏழு நாட்களுள் ஒப்பந்தம் அல்லது உறுதிமுடிக்க அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணைகொடுக்கத் தவறினால் கட்டிய பணம் ரூபா 50ம் அரசாட்சியாரால் பறிமுதலாக்கப்படும். அதுவுமல்லாமல் மேற்கூறியபடி செய்யத் தவறிய கேள்விக்காரன் அரசாட்சியாரின் ஒப்பந்த வேலைகளிற் தவறுசெய்தவராய்க் கவனிக்கப்பட்டு அரசாட்சி ஒப்பந்த வேலைகளில் இனிச் சேர்மானமில்லாதவராய்க் கழிக்கப்பட்டு இடாப்பில் சேர்க்கப்படக்கூடியவராயிருப்பார். ஒப்பந்தத்திற்குக் கையொப்பமிட்டதின்மேல் கட்டிய ரூபா 50 திரும்பக் கொடுக்கப்படும்.

6. ஒப்பந்த வேலையை நடப்பிப்பதற்குப் பிணைகாரராய் வருவோமென்று சம்பந்தஞ் சொல்லித் தங்கள் மேல்விலாசங்களை கொடுக்கும் இரண்டு தக்க மனிதர்களால் கையொப்பமிட்ட கடிதமொன்று ஒவ்வொரு கேள்விக் கடதாசியோடும் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.

7. ஒப்பந்தவேலை சரிவர நிறைவேற்றுவதற்காய் கொடுக்கும் உறுதியில் போதிய பிணைகாரர் சேரல்வேண்டும். உறுதியின் தொகையையும் வேறு தேவையான விளம்பரங்களும் மட்டக்களப்புக் கச்சேரியில் கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம்,

8. கிழக்கு மாகாண ஏசன்றருக்குக் கேள்வி அனுப்பும்போது அக்கேள்வியின் கொப்பியின் ஒன்று கேள்விக்காரனால் தபால் மூலமாய் சங்கைபொருந்த வருமானப் பாதுகாவலருக்கு (Controller of Revenue) அனுப்பப்படல்வேண்டும்.

9. மேற்கூறிய சட்டுப்பாடுகள் யாவும் சரிவர நிறைவேற்றப்பட்டிராத கேள்விகளொன்றும் கவனிக்கப்படமாட்டாது.

10. அரசாட்சி ஒப்பந்தக்காரரின் இடாப்பிலிருந்து கழிக்கப்பட்ட ஏதொருவருக்கும் ஒப்பந்தம் அவருடன் ஒற்றும் தனித்தும் வேறு ஆட்களுடனாவது கொடுக்கப்படமாட்டாது. அல்லது ஒப்பந்தக்காரன் அரசாட்சி ஒப்பந்தக்காரரின் கழிக்கப்பட்ட இடாப்பிலிருக்கும் ஏதொருவரையும் அல்லது கீழ்மாகாண ஏசென்றர் அவர்கள் தமக்குத் தெரிந்த போதிய விஷயங்களி நிமித்தம் எழுத்தில் தடைபண்ணியவரையும் ஒப்பந்த வேலைசெய்ய நியமிக்கப்படாது.

11. கேள்விகளிலொன்றை அல்லது எல்லாவற்றையுங் கவனிக்க அல்லது ஒரு கேள்வியின் எந்தப் பகுதியாயையாவது ஏற்க அரசாட்சியாருக்குத் தத்துவமுண்டு.

டபிள்யு. டீ. குணரட்ன,
கீழ்மாகாண அரசாட்சி ஏசன்றுத்
துரையவர்களுக்காக.

மட்டக்களப்புக் கச்சேரி,
1931 ம் ஆண்டு மாசிமீ 12 ந் திகதி.

## சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : கண்டி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் வதுளை டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1931 ம் ஆண்டு பங்குனி மாதம் 10 ந் திகதியாகிய செவ்வாய்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

எச். சீ. விஜேசிங்க,
ஊவா மாகாண பிஸ்காலுக்காக.

பிஸ்கால் கந்தோர், வதுளை,
1931 ம் ஆண்டு பெப்ருவரிமீ 10 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.